**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 204 / 2018**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW9 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. C. Charles Chelladurai (I.O.) |
| Father / Husband Name | : Durai |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03rd day of March, 2026.

**( A1 to A3 are present )**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 13.20 மணி

நான் தற்போது சென்னை தாம்பரம் மாநகர காவல் ஆணையகர மத்திய குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12-10-2015 அன்று SRMC காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் ஆய்வாளராக

பணியிலிருந்தபோது புகார்தாரர் ராஜேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜா என்பவர் மூலம் CSR கொடுக்கப்பட்டு அதன்பின் 21-10-2015 தேதி உதவி ஆய்வாளர் ராஜா அவர்கள் T15 SRMC காவல் நிலைய குற்ற எண். 910/2015 சட்டப்பிரிவுகள் 294(b), 448, 506(ii) IPC r/w 3 of TNPPDL Act முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் 1 முதல் 10 வரையானவர்களை மீண்டும் விசாரித்தேன் அவர்கள் ஏற்கனவே உதவி ஆய்வாளரிடம் வாக்குமூலத்தில் கூறியதை என்னிடம் கூறியதால் வாக்குமூலம் எதுவும் தனியாக பதிவு செய்யவில்லை. இந்த வழக்கில் ஏற்கனவே பட்டியல் சாட்சிகள் எண்.10 சதீஷ்குமார் வழங்கிய சேதமதிப்பு சான்றிதழை சரிபார்த்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சேதமதிப்பு சான்றிதழ் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்கு உட்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). வழக்கு சொத்து சுமார் 2.5 அடி நீளமுள்ள இரும்பு கடப்பாறை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 2.5 அடி நீளமுள்ள இரும்பு கடப்பாறை ஏற்கனேவ அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான படிவம் 91 **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22-02-2016 ஆம் தேதி ADP அவர்களின் கருத்துரை பெற்று அதே நாளில் நீதிமன்றத்தில் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் என்றைய தினம் சாட்களை எங்கு வைத்து மறுவிசாரணை செய்தேன் என்றால் சம்பவயிடத்தில் வைத்து 13-10-2015 அன்று விசாரணை செய்தேன். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் 21-10-2015 அன்று பதிவுசெய்யப்பட்டு நான் 13-10-2015 அன்று விசாரணை செய்தேனா என்றால் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த மறுநாள் சாட்சிகளை விசாரித்ததாக சாட்சி கூறுகிறார். இறுதி அறிக்கையில் அனைத்து சாட்சிகளையும் விசாரித்ததாக

கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ கடை புகார்தாரருக்கு சொந்தம் என்பதற்கான ஆவணங்கள் ஏதாவது பார்வையிட்டேனா என்றால் பார்க்கவில்லை. நான் எதிரிகள் மீது இதச 448 போட்டது தவறு என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்திருந்தால் எதிரிகள் மீது பதிவு செய்யப்பட்ட இதச 294(b) சட்டப்பிரிவையும் நீக்கியிருப்பேன் என்றால் சரியல்ல. கடையின் சாவி யாரிடமிருந்தது என்று என்னுடைய விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட கடை கஸ்தூரி ரங்கன் என்பவருக்கு எதிரிகள் வாடகைக்கு விட்ட விவரம் என்னுடைய விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். அதை பதிவு செய்யவில்லை. கஸ்தூரி ரங்கன் வாடகை பாக்கி யிருந்ததால் எதிரிகளுக்கும் கஸ்தூரி ரங்கனுக்கும் இடையே பூந்தமல்லி நீதிமன்றத்தில் RCOP 73/2015 என்ற வழக்கு நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் எதிரிகள் நீதிமன்ற உத்தரவு பெற்று நீதிமன்ற அமினா மூலமாக வழக்கு சொத்தை திரும்ப சுவாதீனம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் தொடர்பாக 19-10-2015 அன்று எதிரிகள் ஆய்வாளருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது. நான் தவறாககூறுகிறேன் என்றாலும் வழக்கறிஞர் அறிவிப்பு வந்தவுடன் 21 ஆம் தேதி நான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிடப்பட்ட தேதி 12-10-2015 ஆகும். 12-10-2015 அன்று கொடுத்த புகாரில் உள்ள சட்டப்பிரிவுகள் Cognizable or Non-cognizable offence ஆ என்றால் Cognizable offence ஆகும். Cognizable offence ஆக இருக்கும் பட்சத்தில் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் CSR கொடுக்கப்பட்டு 10 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் அனுசரனையாக நான் 10 நாட்கள் கழித்து எதிரிகளுக்கு எதிராக சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முறையாக இந்த வழக்கை விசாரணை செய்திருந்தால் எதிரிகள் மீது இறுதி

அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டாம் என்றாலும் இது முற்றிலும் சிவில் சம்பந்தப்பட்ட வழக்கு என்றாலும் அ.சா.1 க்கு அனுசரனையாக அவர் கொடுத்த சாட்சி பட்டியலை வைத்து சம்பவயிடத்திற்கு செல்லாமல் எதிரிகள் மீது ஒரு பொய்யான புகார் பதிவுசெய்யப்பட்டு வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2 ஆம் எதிரி எந்த வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவரிடமிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.